தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

# நாகப்பட்டினம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(05.08.2023 முதல் 09.08.2023)

அறிக்கைஎண்: 62/2023 தேதி: 04.08.2023

## நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 38 – 39 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 26 - 27 °செ ஆகவும் பதிவானது.

## நாகப்பட்டினம் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (05.08.2023 முதல் 09.08.2023).

| கடந்தவாரவானிலை (01.08.2023 முதல் 03.08.2023) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (05.08.2023 முதல் 09.08.2023) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 01/08 | நாள்-2 02/08 | நாள்-3 03/08 | தேதி | நாள்-1 05/08 | நாள்-2 06/08 | நாள்-3 07/08 | நாள்-4 08/08 | நாள்-5 09/08 |
| 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 4 | 3 | 4 | 0 | 0 |
| 39 | 38 | 39 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 39 | 38 | 38 | 37 | 37 |
| 27 | 26 | 27 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 27 | 26 | 26 | 26 | 26 |
| 5 | 5 | 1 | மேகமூட்டம் (ஆக்டா) | 7 | 7 | 8 | 6 | 5 |
| 62-60 | 59-50 | 59-54 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70-40 | 80-50 | 70-40 | 70-40 | 70-50 |
| 15 | 15 | 10 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 10 | 16 | 10 | 10 | 12 |
| தென் தென் மேற்கு | தெற்கு | தென் தென் மேற்கு | காற்றின் திசை | மேற்கு தென் மேற்கு | தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

## நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் தெளிவாக காணப்படும். 05.08.2023 முதல் 07.08.2023 ஆகிய தினங்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 37 – 39 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26 - 27 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 - 80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40 - 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 - 16 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பரிந்துரைக்கப்பட்ட வேளாண் சார்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது (TNAU AAS, Meghdoot and DAMINI). |
| நெல் | அறுவடை | நிலவும் வறண்ட வானிலையை பயன்படுத்தி அறுவடை நிலையில் இருக்கும் குறுவை நெற்பயிரை அறுவடை செய்யவும் |
| | நடவு வயல் | நிலவும் வறண்ட வானிலையை பயன்படுத்தி மழைக்கு முன்பாக சம்பா நெல் பயிரிட வயல்களை உழவு செய்து தயார் செய்யவும் |
| | நாற்றாங்கால் | சம்பா நெல்லினை நேரடி விதைப்பு முலம் பயிர் செய்ய ஆடுதுறை 50, ஆடுதுறை 51 மற்றும் சி.ஆர்.1009 இரகங்ள் உகந்தது. |
| பருத்தி | | நிலவக்கூடிய வானிலையின் காரணமாக பருத்தியில் வெள்ளை ஈ பூச்சியின் தாக்கம் அதிகம் ஏற்ப்படக்கூடும். இதனைக் கட்டுப்படுத்த ப்ரோபெனோபாஸ் 50 % EC 100 மி.லி / எக்டர் என்ற அளவில் தெளிக்கவும் |
| கால்நடைகளுக்கு | பசு | கறவை மாடுகளின் மடி வீக்க நோயைக் கட்டுப்படுத்த பொட்டாசியம் பெர்மாங்கேனேட் கரைசலைக் கொண்டு மடியைக் கறப்பதற்க்கு முன்பும் பின்பும் சுத்தம் செய்யவும் |

## குறுஞ்செய்தி

நிலவும் வறண்ட வானிலையை பயன்படுத்தி அறுவடை நிலையில் இருக்கும் குறுவை நெற்பயிரை அறுவடை செய்யவும்

**இயக்குநர்**